தலைப்பு - 242 முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டு

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை

மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.11வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதிகள் | நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்திருத்தல் | 1. நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளாமை | 2.7 |
| | | 2. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.6 |
| | | 3. பெறுகை நடைமுறையினை செயற்படுத்துவதில் உள்ள குறைப்பாடுகள் | 2.2 |
| | | 4. எதிர் பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தை பெற்றுக்கௌள்ளாமை | 2.1.1 |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, | 1. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதில் உள்ள குறைப்பாடுகள் | 2.8 |
| | | 2. பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுவதில் உள்ள குறைப்பாடுகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்திருத்தல் | | |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | ஆவணப் பதிவேடு மற்றும் புத்தகங்களை இற்றைப்படுத்தி பேணாமை | 2.9 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் வாகன உபயோகத்தில் உள்ள குறைப்பாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஓ) | எந்த ஒரு செலவு அல்லது பொறுப்பேனும் தனது வாக்குப் பணம் அல்லது பிற அனுமதித்த நிதி ஏற்பாடு ஆகியவற்றின் எல்லைக்குட்பட்டதெனவும் அது போதியளவு அதிகாரத்தைப் பெற்றுள்ளதெனவும், | 1. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.7 |
| | | 2. மனிதவள முகாமைத்துவத்தில் உள்ள குறைப்பாடுகள் | 2.10 |
| | | 3. அரசாங்க அலுவலர்களின் பிணை வைத்தல் | 2.11 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்டாமை

வருடாந்த செயற்றிட்டம் படி திணைக்களத்தால் 05 பிரதான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படுதல் வேண்டுமாயினும், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பிரகாரம், அந்தப் பணிகள் 05 இல் 02 ஐ முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 20 ஆந் திகதிய 04.∴.2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம், 2017.08.15 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்ட தீர்மானங்களுக்கமைவாக, எல்லா அரச நிறுவனங்களிலும் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், விலகிச் செல்லுதல், சேவை வெறித்தாக்கல், சேவையிலிருந்து பணிநீக்கம் செய்தல், ஓய்வு பெறச் செய்வித்தல் மற்றும் மரணமடைதல் ஆகிய விடயங்களுக்கு ஏற்புடையதாக நிகழ்கின்ற மாற்றங்களை குறிப்பிடப்பட்டு அரச துறையில் பதவியணி தொடர்பாக தரவு முறைமையினை பேணிச் செல்லுதல் மற்றும் இற்றைப்படுத்தல் பொறுப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காலாண்டு ரீதியாக இற்றைப்படுத்திய தகவல்களை, அமைச்சரவையிடம் சமர்ப்பிக்குமாறும் அதன்மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ை) திணைக்களத்தினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்திருந்த 2017 ஆம் ஆண்டு 31 ஆம் திகதியிலான அரச சேவையில் மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் (ரேடிஉை ளுநசஎஉைநள ர்ரஅயெ சுநளழரசஉந ஐகெழசஅயவழைெ – 2017) அறிக்கையில் 08 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், 39 அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தகவல்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனங்களில் உண்யைமான பதவியணி தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ைை) கணக்காய்வில் அறிய வந்தவாறு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தகவல் முறைமை பேணப்படினும், உண்மையான பதவியணி தகவல்கள் ஏற்புடைய நிறுவனங்களிலிருந்து அழைப்பித்துக் கொண்டதன் பின்னர், இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ைைை) 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 18 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்கு செயற்குழு கூட்டத்தின் கட்டளை இலக்கம் 09 பிரகாரம், பகுதிநேர அரச நிறுவனங்கள் மற்றும் உள்;ராட்சி நிறுவனங்களில் உண்மையான பதவியணி தகவல்களை திரட்டி தரவு முறைமையினை (னுயவய டியளந) பேணிச்

செல்வதற்கு கட்டளையிடப்பட்டிருப்பினும், அந்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் சரியான, முழுமையான மற்றும் காலத்திற்கேற்றவாறான தரவு முறைமை பேணிச் செல்வதற்கு திணைக்களம் இதுவரை செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச சேவையினை சிரேட்ட மட்டத்தில் பேணிச் செல்வதற்கு தேவையான சிறப்பான பதவிகளின் எண்ணிக்கையினை அரச நிறுவனங்களிடம் வழங்குதல், தமது செயற்பணியாக கொண்டுள்ள இத் திணைக்களம், அரச துறையின் புதிய பதவிகளை உருவாக்கும் செயற்றிட்டம் மற்றும் அதன்படி செயலாற்றுவதில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச துறையில் புதிய பதவிகளை உருவாக்கும் நடைமுறை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில படிமுறைகளை புதிய பதவிகளை உருவாக்கம்போது பின்பற்றப்படாமை.

(ii) புதிய பதவிகளை உருவாக்கும்போது நிதி ஒழுங்குவிதி 71 இன்கீழ் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கான, சாட்சிகள் கடிதக் கோவைகளில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்களும் காணக்கூடியதாக இருந்தது.

(iii) திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் பதவிகளை இயன்ற வரை ஒரே சந்தர்ப்பத்தில் அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லையென்பதுடன், அதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அவ்வப்போது பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

(இ) அரச துறை நிறுவனங்கள், பொது மக்களிடம் வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனுடனம் தரத்துடனும் வழங்கும் நோக்கத்துடன், 2017 ஆம் ஆண்டு வரவு செலவு பிரேரணை பிரகாரம், அரச சேவை சிறந்த முறையில் வழங்குவதற்காக பதவியணி மீளாய்வினை மேற்கொள்வதற்கு பிரேரணை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு சனவரி 11 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க "அரச நிறுவனங்களில் பதவியணி மீளாய்வு – 2017" என்ற தலைப்பில் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டிருந்தது. ஆயினும் கணக்காய்வு மேற்கொள்கின்ற திகதியிலும் இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், அப் பணிகளை முடிவுறுத்தப்படவில்லை.

(ஈ) 2017 ஆண்டின் செயற்றிட்டம்படி முழுமொத்த அரச சேவையில் சிறந்த பதவியணியை பேணிச் செல்வதற்காக பதவியணி மீளாய்வு மேற்கொள்ளுதல் பிரதான பணியாக இருந்ததுடன், இந்த மீளாய்வு மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான நவீன தொழில்நுட்ப முறைமை அடையாளம் காணப்பட்டு, அந்த முறைமையினை நடைமுறையில் பயன்படுத்தல் தொடர்பாக திணைக்களத்தின் அலுவலர்களை பயிற்றுவித்தல் செயற்றிட்டத்தில் இரண்டாவது பிரதான பணியாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இந்த செயலமர்வு வெளியக இடங்களில் நடாத்துவதற்கு திறைசேரி பிரதி செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த பணியும் அடங்கலாக மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 850,000 ஆன ஒதுக்கீடினை பெற்றுக்கொண்டு பெறுகை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டு முடிவிலும் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தவில்லையென்பதுடன், பதவியணி மீளாய்வு நடவடிக்கைகளும் ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் அடைந்து கொள்வதற்கு எதிர் பார்க்கப்பட்டிருந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லையென அவதானிக்க கூடியதாக இருந்தது. மனித வளங்களின் முகாமைத்துவம் தொடர்பான நிபுணர்களின் ஆலோசனை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழு, தேசிய வரவு செலவு திணைக்களம், அரசாங்க

நிருவாக முகாமைத்துவ அமைச்சு என்பன பிரதிநிதித்துவப்படுத்திய குழு உறுப்பினர்களின் பங்களிப்புடன், இப் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

2.2 பெறுகை நடைமுறையினை செயற்படுத்தி வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வழங்கல் மற்றம் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது, தயாரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான பெறுகை திட்டம்படி எழுது கருவிப் பொருட்கள் அலுவலக தேவைகள் என்பவற்றின்கீழ் 1.6 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருப்பினும், ஆண்டுக்குள் 1 மில்லியன் ரூபாவிலான மேலதிக ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பெறுகை திட்டம் திருத்தப்படாமையால் திணைக்களத்தின் பெறுகை திட்டம் முறைசார்ப்படுத்தவில்லை.

2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

2.3.1 வாகனங்களின் உபயோகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(ண) தேசிய வரவு செலவு திணைக்களத்தினால் நிதி குத்தகை முறையின்கீழ் வழங்கப்பட்ட 05 வாகனங்களில் ஒரு வாகனம் நிரல் வரிசை அமைச்சிடம் வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்திற்கு உரியதான எரிபொருள் செலவு அமைச்சினால் செலவிடப்பட்டிருப்பினும், ரூபா.195,618 ஆன ஏனைய செலவுகள் திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ணை) திணைக்களத்திற்குரிய வண்டியொன்று 2017 ஆம் ஆண்டு சனவரி 11 ஆந் திகதி நிதி அமைச்சிடம் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு உட்படுத்திய திகதியான 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் 10 ஆந் திகதி வரை பழுதுபார்த்தல் செலவாக ரூபா.64,839 திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ணை) வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான பரிசோதனை நடாத்துவதற்கு பணியாற்றப்படாமையால், நிலையான சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் தன்மை கணக்காய்வில் உறுதியாகவில்லை.

2.4 பொது மக்களிடம் சேவை வழங்குதல்

பின்வரும் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி திணைக்களத்தால் பின்வரும் சேவைகளை பொது மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டுமானாலும், அவை நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது.

(அ) திணைக்களத்தின் இணைய தளத்தில் செயற்றிட்டம் மற்றும் செயலாற்றுகை அறிக்கை உள்ளடக்கப்பட வேண்டிய பகுதியில், தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாயினும் திணைக்களத்தால் கணக்காய்விற்கு உட்படுத்திய திகதியான 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 13ஆந் திகதியிலும் செயற்றிட்டம் மற்றும் 2016, 2017 ஆண்டுகளில் அந்த தகவல்களை உள்ளடக்கி இணையத்தளம் இற்றைப்படுத்தப்படவில்லை. இணைய தளத்தில் உள்ளடக்கப்படுவதற்காக சம்பந்தப்பட்ட தகவல்களை, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக திணைக்களத்தால் கணக்காய்விடம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தால் இணையதளத்தின் ''சபெந்தி'' (டுமைெள) இன்கீழ் நியதிச் சட்ட சபைகள், அரச துறை, மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள் / பிரதேச செயலகங்கள் என்பவற்றில் பதவியணியின் தகவல்களை உள்ளடக்கி இற்றைப்படுத்த வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

2.5 நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளுதல்

நிலைபெறுடனான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தமது விடயவெல்லையின் கீழ் வருகினற அலுவல்கள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

2.6 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தல்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 05 ஆண்டு காலப் பகுதிக்கு திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஒதுக்கீடுகள், உபயோகம் மற்றும் மிகுதி தொடர்பான தகவல்கள், அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

| | செலவு | தேறிய ஒதுக்கீடு ரூபா மில்லியன் | உபயோகம் ரூபா.மில்லியன | மீதி ரூபா.மில்லியன் | எஞ்சிய தேறிய ஒதுக்கீடு சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| 2013 | மீண்டுவருஞ் | 35.2 | 32.8 | 2.4 | 7 |
| | மூலதன | 15.2 | 3.5 | 11.7 | 77 |
| | மொத்தம் | 50.4 | 36.3 | 14.1 | 28 |
| 2014 | மீண்டுவருஞ் | 36.7 | 33.8 | 2.9 | 8 |
| | மூலதன | 2.1 | 1.5 | 0.6 | 28 |
| | மொத்தம் | 38.8 | 35.3 | 3.5 | 9 |
| 2015 | மீண்டுவருஞ் | 44.3 | 43.1 | 1.2 | 3 |
| | மூலதன | 4.1 | 3.3 | 0.8 | 19 |
| | மொத்தம் | 48.4 | 46.4 | 2.0 | 4 |
| 2016 | மீண்டுவருஞ் | 50.0 | 48.6 | 1.4 | 3 |
| | மூலதன | 3.2 | 1.8 | 1.4 | 44 |
| | மொத்தம் | 53.2 | 50.4 | 2.8 | 5 |
| 2017 | மீண்டுவருஞ் | 72.4 | 66.2 | 6.2 | 9 |
| | மூலதன | 3.8 | 3.7 | 0.1 | 3 |
| | மொத்தம் | 76.2 | 69.9 | 6.3 | 8 |

மீளாய்விற்கான ஆண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் 11 மீண்டுவருஞ் செலவு தலைப்புகளுக்கும் 02 மூலதன செலவு விடயங்களுக்கும் ஏற்புடையதாக ரூபா.55,380,000 தொகையிலான வருடாந்த ஒதுக்கீடுகள், மொத்தம் ரூபா.16,067,300 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டு

ஒதுக்கீடுகள்மூலம் நூற்றுக்கு 16 தொடக்கம் நூற்றுக்கு 303 வரை அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 02 மீண்டுவருஞ் செலவு விடயங்களில் வருடாந்த ஒதுக்கீடு, மொத்தம் ரூபா.5,690,300 ஆன மேலதிக ஒதுக்கீடுகளின்மூலம் நூற்றுக்கு 242 மற்றும் நூற்றுக்கு 303 வரை அதிகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 11 செலவு வியடங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 30,672,000 ஆன ஒதுக்கீடுகளில், மொத்தம் ரூபா 4,124,515 ஆன மீதி தொகை இருந்ததுடன், தேறிய ஒதுக்கீடு நூற்றுக்கு 35 தொடக்கம் நூற்றுக்கு 85 வரையிலான எல்லையை கொண்டிருந்தது.

(ஈ) வெளிநாட்டு பிரயாணச் செலவுகளின் பொருட்டு ஏற்பாடு அளிக்கப்பட்டிருந்த ரூபா.950,000 ஆன ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா. 739,000 தொகை வீரமோங் திட்டத்தின்கீழ் வேறு செலவு விடயத்திற்கு மாற்றிய பின்னரும், கடந்த ஆண்டு இறுதியில் ரூபா.180இ263 அதாவது நூற்றுக்கு 85 ஐ உபயோகப்படுத்தியி-ருக்கவில்லை.

(இ) ஆண்டுக்குள் 09 செலவு விடயங்களின் பொருட்டு மொத்தம் ரூபா 9,974,000 ஆன குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ஒதுக்கீடுகளை அதிகரித்துக் கொண்டிருந்தபோதிலும், மொத்தம் ரூபா.5,255,219 ஆன மீதி, குறித்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 16 தொடக்கம் நூற்றுக்கு 87 வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

2.7 அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு

பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதான விடய இலக்கம் 24201 இன்கீழ், அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உண்மையான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவு | | கிடைக்கப் பெறுதல் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக் கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லயின் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.00 | 5.32 | 2.50 | 3.11 | 18.00 | 15.26 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆந் திகதிய வரவு செலவு சுற்றுநிருப இலக்கம் 118 இன்படி, இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன்மீதி 03 மாதங்களுக்குள் சீராக்கப்பட வேண்டுமாயினும், அலுவர்களில் இரண்டு பேர்களது மொத்தம் ரூபா .381,910 ஆன கடன் மீதி தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

2.8 கட்டுநிதி கணக்கு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு 09 ஆந் திகதிய மற்றும் வுழு/டீநு1/2/ஐஆீ/242/2017 ஆம் இலக்கஇ 2017 ஆம் ஆண்டில் கட்டுநிதி எல்லை தீர்மானித்தல் என்ற தலைப்பிலான கடிதம் பிரகாரம், மாதாந்த கட்டுநிதி எல்லை, காலாண்டுக்கொருமுறை மீளாய்வு செய்து உண்மையான தகவல்களை பதிவு செய்து, கட்டுநிதி எல்லைகளை தீர்மானித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பினும், மேற்படி திட்டமிடப்பட்ட, விண்ணப்பித்த மற்றும் கிடைக்கப்பெற்ற கட்டுநிதிகளுக்கிடையில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டமை காரணமாக திணைக்களம் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 04 ஆந் திகதிய இலக்கம் 17120027 கொண்ட காசோலையில் ஊழியர் சம்பளத்திற்காக ரூபா.690,000 ஆன கட்டுநிதி திணைக்களத்திடம் கிடைக்கப்பெற்றிருப்பினம், அந்த பணத் தொகை எதுவித நடவடிக்கைகளின் பொருட்டும் பயன்படுத்தாது 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதியில் திறைசேரி பிரதி செயலாளரிடம் 282284 ஆம் இலக்க காசோலைமூலம் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

2.9 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணப்படாமை

திணைக்களத்திற்குரிய வாகனங்களின் விபரங்களை உள்ளடக்கி 1978 ஆம் ஆண்டு 19 ஆம் திகதிய இலக்கம் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்படவில்லை.

2.10 மனித வளங்களின் முகாமைத்துவம்

இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்கரிய வேதனாதிகளுக்கான செலவுகள்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிடப் பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டிற்கு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகள், செலவு தொகுதியின் பொருட்டு 48.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தனி நபர் வேதனாதிகளின் செலவு ரூபா. 625,776 ஆக காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட அலுவலரகளின் எண்ணிக்கை | உண்யைமான அலுவலர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (ை) | சிரேட்ட மட்டம் | 25 | 17 | 08 |
| (ைை) | மூன்றாம் நிலை மட்டம் | 03 | 03 | 00 |
| (ைைை) | இரண்டாம் நிலை மட்டம் | 47 | 40 | 07 |
| (ள) | ஆரம்ப மட்டம் | 20 | 17 | 03 |
| | மொத்தம் | 95 | 77 | 18 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல ஆண்டுகளாக சிரேட்ட மட்டத்தில் 08 பதவிகள் அடங்கலாக18 பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியதாக அவதானிக்கப்பட்டதுடன், அப் பதவிகளை நிரப்புவதற்கு தேவையில்லையெனில் பதவியணி மீளாய்வு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், திணைக்களம் அவ்வாறு பணியாற்றப்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எணிணிக்கை 89 ஆகியதுடன், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 95 ஆகியது. அதனடிப்படையில் திணைக்களத்தால் 06 பதவிகளை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பதவிகள் தேவையில்லையெனில் பதவியணி மீளாய்வு செய்வதற்கு திணைக்களம் பணியாற்றப்படவில்லை.

2.11 அரசாங்க அலுவலர்களின் பிணை வைத்தல்

---

நிதி ஒழுங்குவிதி 880 பிரகாரம், சம்பந்தப்பட்ட அலுவலர்களால் பிணை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக பிணை வைக்கப்பட வேண்டுமாயினும், திணைக்களம் அவ்வாறு பணியாற்றப்படவில்லை.